வற்றிற்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க, வேட்பாளர்கள் வேட்புத்தாளை 1990 ஆம் ஆண்டு மே திங்கள் 2-ஆம் நாள், புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். வேட்புத் தாளைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள் 1990 ஆம் ஆண்டு மே திங்கள் 3-ஆம் நாள், வியாழக்கிழமை, பிற்பகல் 3 மணிக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறும். விலகிக் கொள்ள விரும்பும் வேட்பாளர்கள் 1990 ஆம் ஆண்டு மே திங்கள் 4-ஆம் நாள் வெள்ளிக்கிழமை, பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய இடங்களின் எண்ணிக்கைக்கு மேற்படுமாயின், குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் நாள் பின்னர் அறிவிக்கப்படும்.

8. மானியக் கோரிக்கைகள், 1990-91—விவாதமும் வாக்கெடுப்பும் —தொடர்ச்சி.

(அ) கோரிக்கை எண் 1—நிலவரித் துறை.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ரூ. 29,68,77,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயக் கூலிகளுக்கு குடியிருக்க இடமும் விவசாயம் செய்ய நிலமும் பினாமி நிலத்தைப் பிரித்து வழங்குவது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 29,68,77,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு புறம்போக்கு நிலங்களில் குடியிருக்கும் ஏழை மக்களுக்கு அந்த குடியிருப்பு இடங்களை அவர்களுக்கு பட்டா செய்து கொடுக்க வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 29,68,77,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

10-15 மணி

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம் மடையம்பாக்கம் கிராமத்தில் கடந்த 40 ஆண்டுக் காலமாக ஏரி புறம்போக்கு நிலத்தில் விவசாயம் செய்து வந்தும் பொதுப் பணித்துறை பட்டா வழங்க ஆட்சேபணை இல்லை என தெரிவித்திருந்தும் நிலப்பட்டா வழங்கப்படாமல் இருப்பதை தவிர்த்து துரிதப்படுத்துவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 1—நிலவரித் துறை என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 29,68,77,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

(ஆ) கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள்—நிருவாகம்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள் நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,71,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

திரு. ஆர். நடேசன் : மாண்புமிகு பேரவைத் தல்லவர் அவர்களே, முத்திரைத்தாள்கள் கிடைப்பதில் சில குறிப்பிட்ட மதிப்புள்ளவை கிடைப்பதில் தட்டுப்பாடு இருப்பதை போக்குவது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள் நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,71,25,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

1990 ஏப்ரல் 19]

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத்தாள்கள் போதுமான அளவில் கிடைக்க வேண்டியது பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

''மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள் நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 1,71,25,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

''மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள் நிருவாகம் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,71,25,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முத்திரைத் தாள்கள் தட்டுப்பாடு காரணமாக அதிக விலைக்கு விற்கப்படுவதைத் தடுக்க வழிகள் வகுப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 5—முத்திரைத் தாள்கள் நிருவாகம் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,71,25,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும். ''

(இ) கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப் பதிவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 13,34,35,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பத்திரப் பதிவு வருவாயில் நகராட்சிகளுக்கு கிடைத்து வரும் மானியத்தின் விழுக்காட்டை உயர்த்தித் தர வேண்டிய அவசியம் பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப்பதிவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 13,34,35,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

THIRU M. SUNDARADAS : Sir, to discuss the need to bring Onnalavadi, Bommandapalli, Thorapalli under the jurisdiction of Sub-Registrar's Office, Hosur, I move the following cut motion—

"that the allotment of Rs. 13,34,35,000 under Demand No. 6—Registration be reduced by Rs. 100."

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப்பதிவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,34,35,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் நகரில் நிலங்களின் மதிப்பு மார்க்கெட் மதிப்பிற்கு மேல் இரண்டு மடங்கிற்கு மேல் பத்திரப்பதிவுத் துறை நிர்ணயம் செய்துள்ளதால் எழுந்துள்ள நிலை குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

" மானியக் கோரிக்கை எண் 6—பத்திரப்பதிவு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 13,34,35,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ".

(ஈ) கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" மானியக் கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,19,28,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பட வேண்டும் ".

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஏற்படும் வெள்ளம் மற்றும் பெரு மழை, தீ விபத்து ஆகியவற்றால் வீடுகள் மற்றும் கடைகளுக்கு ஏற்படும் நட்டம் முழுவதையும் கணக்கிட்டு பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு வழங்க வேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்;

1990 ஏப்ரல் 19] [திரு. என். பழனிவேல்]

'' மானியக் கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,19,98,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் தொகுதியில் அண்மையில் திடீரென பெய்த மழையாலும் வெள்ளப் பெருக்காலும் அனைத்து கிராம சாலைகளும் பழுதடைந்துள்ளதை பராமரிப்பது சம்பந்தமாக விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 1,19,98,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வறட்சி நிவாரணப் பணிகள் கண்காணிப்பில் மக்கள் பிரதிநிதிகளை அங்கத்தினர்களாக சேர்ப்பது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

'' மானியக் கோரிக்கை எண் 41—இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூபாய் 1,19,98,000இல் ரூபாய் 100 குறைக்க வேண்டும் ''.

(உ) கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' மானியக் கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின் கீழ் ரூ. 42,53,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும் ''.

10-20 மணி

திரு. கே. ரவி அருணன் : பேரவைத் தலைவர் அவர்களே, கொள்கை பற்றி விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,53,00,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

திரு. என். பழனிவேல் : தலைவர் அவர்களே, தீ விபத்து மற்றும் வெள்ள பாதிப்புகளால் பாதிக்கப்படும் பொது மக்களுக்கு தற்போது எவ்வளவு நட்டம் ஏற்பட்டாலும் ரூபாய் 400 என்றிருப்பதை உண்மையில் ஏற்பட்ட நட்டத்தை கணக்கிட்டு நட்டம் முழுவதையும் வழங்க வேண்டியது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,53,00,000-இல் ரூ. 100 குறைக்க வேண்டும் ''.

திரு. எஸ். டி. உகம்சந்த் : தலைவர் அவர்களே, தீ விபத்தில் எரிந்த குடிசைகளுக்கு குறைந்த பட்சம் ரூபாய் 1,000 வழங்குவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

'' கோரிக்கை எண் 46—இழப்பீடுகளும், ஒதுக்கீடுகளும் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 42,53,00,000இல் ரூ. 100 குறைக்க வேண்டும்''.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : தலைவர் அவர்களே, அவைமுன் வைக்கப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகளைப் பற்றிய விரிவான *விளக்க உரையை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்கெனவே படித்திருக்கக் கூடும். அவர்கள் கருத்துக்களை நான் தெரிந்ததற்குப் பிறகு இறுதியில் எனது கருத்தை தெரிவிக்க விரும்புகிறேன் என்று கூறி அமைகின்றேன்.

9. காவிரி நீர்ப் பிரச்சினை பற்றி சென்னையில் நடைபெறும் பேச்சு வார்த்தை குறித்து.

***திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் :** பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கைகள் மீது விவாதம் ஆரம்பிப்பதற்கு முன்னால் நான் ஒரு வாழ்த்துச் செய்தியைச் சொல்ல ஆசைப்படுகிறேன். கடந்த 2, 3 தலைமுறைகளாக தமிழகத்தின் எதிர்காலத்தைக் கேள்விக்குறியாக ஆக்கிக் கொண்டிருந்த காவிரி

---

*118–173-ம் பக்கங்களில் இணைப்புகளாக அச்சிடப் பெற்று உள்ளன.